**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) - TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF THIRU. G. ULAGANATHAN, OVER AN EXTENT OF 2.39.0 HEC (TOTAL CLUSTER AREA 21.08.0 HEC) LOCATED IN S.F.NO. 1/2C, 1/3, 1/4, 1/5 & 16/2A, SITHALAPAKKAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 03.09.2024 AT 10.30 AM IN M/s. R.S.E MAHAL, MAMANDUR, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. Baskara Pandiyan, IAS., | District Collector, Tiruvannamalai. |
| 2. | Selvi. Pallavi Verma, IAS., | Sub Collector, Cheyyar. |
| 3. | Tmt. T. Kalaiselvi, M.E., | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Public and Environmentalists | 46 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Collector, Tiruvannamalai, other Government Officials, General Public, and Environmentalists for the Public Hearing meeting for the proposed rough stone and gravel quarry.

The District Environmental Engineer informed that as per the Environmental Impact Assessment Notification 2006 all the projects and activities listed in the schedule to the notification shall require prior Environmental Clearance from The Ministry of Environment, Forests and Climate Change, GoI / State Environment Impact Assessment Authority the process of EC involves public consultation, and hence the public hearing meeting is being conducted today for the proposed Rough stone and Gravel Quarry of, M/s. G. Ulaganathan over an extent of 2.39.0 hectare in Sithalapakkam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statements the minutes will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing was published in dailies of "New Indian Express" (English) & "Daily Thanthi" (Tamil) on 27.07.2024 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone & gravel quarry of M/s. G. Ulaganathan.

Further, the District Environmental Engineer has informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority.

The District Collector instructed the project proponent to explain about the proposed Rough stone & gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent, Thiru. D. Gokul Raju, Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them with help of power point presentation.

Then the District Environmental Engineer, TNPCB requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

The following are the views represented by the public.

**1. Mr. Perumal, Sithalapakkam Village,**

He informed that they cannot do agriculture activities due to the proposed quarry, the water level will go down; without water the agriculture activities will not be possible. In Thirukkural, Thiruvalluvar says that Wherever it whirls, the world must follow the farmer. Thus despite hardships, farming is the best and any occupation is below agriculture. Agriculture cannot be done if this quarry comes. Nothing can be done without water. Valluvar has said that the world cannot survive without water, and we express our opposition to this proposed quarry. If this quarry comes, we cannot live. We have been doing agriculture for generations. Without agriculture, we cannot survive. We have been doing agriculture not for one generation but for many generations. We have a lot of problems with the stone soil coming from the quarries. If this quarry comes, we cannot survive. Survival of goats and cows will be difficult. Lake and Ponds located nearby the proposed quarry will be affected, water level in the well will go down and hence Agriculture activities can never be done. He concluded his speech by saying, "We are protesting against this proposed Rough stone and gravel quarry."

**2. Mr.Palani, Sithalapakkam Village,**

He said that our village has been improved because of quarry activities and there's no future in agriculture and he welcomed this proposed quarry. He also informed that job prospects are good, lorries are running smoothly and he concluded his speech with a "Thank you."

**3.Mr. Perumal, Sithalapakkam Village,**

He said that with the arrival of this quarry, some of our people would gain employment. We welcome the arrival of this quarry. Then he concluded his speech.

**4.Mr. Desingu, Sithalapakkam Village,**

He said that because of the existing quarries, the roads have deteriorated. Parents won't even let their daughters to this place after seeing the worst road conditions and he invited the officials to visit their

place to watch the terrible road conditions. We don't have bus services in our village; people say it's a village without bus connectivity. He concluded his speech by raising objections against the proposed Rough stone quarry.

**5.Mr. Umapathy, Sithalapakkam Village,**

He expressed his support to this proposed quarry, He mentioned that a fund of Rupees Three crore sixty lákh which was allocated for CSR activities should be utilized in his village of Sittalapakkam, a village in Arsana Panchayat, which will be directly impacted by the quarry. He requested the District Collector to allocate the funds solely to their village. He emphasized that the funds should not be shared with another village, given the significant effects we are experiencing. He concluded his speech by reiterating that the quarry's presence is beneficial and that necessary arrangements can be made to accommodate it.

**6.Mr. Murugan, Sithalapakkam Village,**

He informed that job opportunities for fifty to sixty people will be created because of this proposed quarry. With that, he concluded his speech by expressing his enthusiastic support, saying, 'We heartily welcome the coming of this quarry'.

**7.Mr. Jaganathan, Sithalapakkam Village,**

He explained that his agricultural land is located near by the proposed quarry site, where he cultivates crops like eggplant, paddy, and lady's finger. He emphasized that the quarry's operation will significantly impact his livelihood. As this proposed quarries operation resulting in water scarcity, he strongly objected this proposed quarry which will affect his five acres of land located nearby. He reiterated his opposition and concluded his speech by mentioning that he has also given a compliant petition to express his concerns.

**The following 12 members of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone quarry. Among the 12 members, 10 members have expressed their support and 2 members have expressed their objection to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1 | P.Varadhapillai, Sithalpakkam. | Expressed objection against the proposed quarry |
| 2 | M.Mala, Sithalpakkam. | Expressed objection against the proposed quarry |
| 3 | P. Ravi, Chitdra Durga District,., Karnataka | Expressed support in favour of the proposed quarry |
| 4 | V. Bhagyalakshmi, Chitdra Durga District, Karnataka | Expressed support in favour of the proposed quarry |
| 5 | M/s. Youth Institute for Poor People, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 6 | U. Ramachandra, Proddatur, Kadappa District, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 7 | B. Durga Prasad, Nandyal, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 8 | M/s. Chaitanya Welfare Society, Nellore, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 9 | B. Muni Krishna, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 10 | S. Chiranjeevi, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 11 | A. Subramaniyan, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 12 | A.P. Rajendiran, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the District Collector's approval, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 27.07.2024 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 5 & 46 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting and social media-12 numbers.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**District Collector,**
**Tiruvannamalai.**
(5/6)

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமம், புல எண்கள். 1/2C, 1/3, 1/4, 1/5 & 16/2A, 2.39.0 ஹெக்டேர் (மொத்த கூட்டுபரப்பளவு 21.08.0 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். G. உலகநாதன் கல் மற்றும் கிராவல் குவாரிக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 03.09.2024 அன்று தி/ள். R.S.E மஹால், மாமண்டூர், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**
**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. தெ. பாஸ்கர பாண்டியன் IAS., | மாவட்ட ஆட்சியர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | செல்வி. பல்லவி வர்மா, IAS., | சார் ஆட்சியர், செய்யார் |
| 3. | திருமதி. தி. கலைச்செல்வி M.E., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (46 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களையும், அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள கல் குவாரிக்கு சுற்றுச்சசூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்,

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமத்தில் மொத்தம் 2.39.0 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். G. உலகநாதன் கல் மற்றும் கிராவல் குவாரி சுரங்க நிறுவனமானது கற்களை வெட்டி எடுக்க மாநில

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். G. உலகநாதன் கல் மற்றும் கிராவல் குவாரி சுரங்க நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். R.S.E மஹாலில் 03.09.2024 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறுமென நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் மற்றும் தினத்தந்தி செய்தித்தாள்களில் 27.07.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. D. கோகுல் ராஜூ, ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேசன் & மைனிங் சொல்யுசன்ஸ் அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. பெருமாள், சித்தாலப்பாக்கம் கிராமம்,**

இவர் கூறுகையில், இந்த கல்குவாரி வருவதனால் எங்களால் விவசாயம் செய்ய முடியவில்லை. இந்த கல்குவாரி வந்தால் நீர்மட்டம் இறங்கிவிடும், நீர்மட்டம் இறங்கினால் நாங்கள் எப்படி விவசாயம் செய்ய முடியும். நீர் இல்லை என்றால் எதுவும் இல்லை. திருக்குறளில், திருவள்ளுவர் "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்கிறார், அது போல எந்த தொழிலாக இருந்தாலும் விவசாயத்திற்கு கீழே தான். இந்த கல்குவாரி அமைந்தால் விவசாயம் செய்ய முடியாது. நீர் இல்லாமல் ஒன்றும் செய்ய இயலாது. நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவர் கூறியிருக்கிறார், கல்குவாரி அமைவதற்கு எங்கள் எதிர்ப்பை தெரிவிக்கிறோம். கல்குவாரி அமைந்தால் நாங்கள் வாழவே முடியாது. தலைமுறை தலைமுறையாக நாங்கள் விவசாயம் தான் செய்து வருகிறோம். விவசாயம் இல்லை என்றால் நாங்கள் வாழ முடியாது. ஒரு தலைமுறை இல்லை பலதலைமுறையாக விவசாயம் தான் செய்து வருகிறோம். கல்குவாரியில் இருந்து வருகிற கல் மண்களால் எங்களுக்கு நிறைய பிரச்சினைகள் வருகிறது. இந்த கல்குவாரி வந்தால் நாங்கள் வாழ முடியாது. ஆடு மாடுகள் இருக்காது. பக்கத்தில் ஏரி, குளங்கள் இருக்கிறது.

கிணற்றில் நீர் இருக்காது. விவசாயம் செய்யவே முடியாது ஒருபோதும். இந்த கல்குவாரி வருவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம், என்று விளக்கி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. பழனி, சித்தாலப்பாக்கம் கிராமம்**

இவர் தனது உரையில் இந்த குவாரி வந்ததற்கு பின் தான் தங்கள் ஊர் நன்றாக உள்ளது என தெரிவித்து தொழில் வளம் நன்றாக இருப்பதாகவும், லாரிகள் நன்றாக இயக்கப்படுவதாகவும் தெரிவித்தார். விவசாயத்தில் பலன் இல்லை, நன்றி, என கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**3. திரு. பெருமாள், சித்தாலப்பாக்கம் கிராமம்,**

இவர் தனது உரையில், இந்த கல்குவாரி வருவதினால் தங்கள் மக்கள் ஒரு சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது. நாங்கள் இந்த குவாரி வருவதை வரவேற்கிறோம், என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. தேசிங்கு, சித்தாலப்பாக்கம் கிராமம்**

இவர் தனது உரையில், இந்த கல்குவாரி வருவதனால் சாலைகள் சரியாக அமைக்கப்படுவதில்லை. இதனால் இவ்வூரில் பெண் கூட கொடுப்பதில்லை, சாலைகள் நன்றாக அமையவில்லை, தங்கள் ஊருக்கு பேருந்து வருவதில்லை, பேருந்து வராத ஊர் என்கிறார்கள் என தெரிவித்து கல்குவாரி நடத்துவது தங்களுக்கு சரியாகப்படவில்லை என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. உமாபதி, சித்தாலப்பாக்கம் கிராமம்,**

இவர் இந்த கல்குவாரி அமைவதை வரவேற்று இந்த குவாரி நிர்வாகத்தினரால் CSR திட்டத்தின் மூலம் ஒதுக்கிய மூன்று கோடி அறுபது லட்சம் ரூபாயினை சித்தாலப்பாக்கம் கிராமத்திற்கு மட்டும் ஒதுக்கி தருமாறு மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக்கொண்டார். சித்தலப்பாக்கத்தில் தான் குவாரி அமைவதால் பாதிப்பு நிறைய உள்ளது. எனவே, இரண்டு கிராமத்திற்கு நிதியினை ஒதுக்க கூடாது. சித்தாலப்பாக்கம் கிராமத்திற்கு மட்டும் நிதியினை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்து கல்குவாரி அமைவதற்கான ஏற்பாடுகள் செய்யலாம், என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. முருகன், சித்தாலப்பாக்கம் கிராமம்,**

இவர் தனது உரையில், இந்த கல்குவாரி வருவதினால் ஐம்பது அறுபது பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, இந்த கல்குவாரி அமைவதினை மனப்பூர்வமாக வரவேற்கிறோம், என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. ஜெகநாதன், சித்தாலப்பாக்கம் கிராமம்,**

இவர் தனது உரையில், இந்த கல்குவாரி அமைய உள்ள இடத்திற்கு அருகில் தான் என் நிலம் இருக்கிறது. நான் விவசாயம் தான் செய்து வருகிறேன். கத்தரிக்காய், நெல் சாகுபடி, வெண்டைக்காய் போன்ற காய்கறி செடிகளை வளர்த்து வருகிறேன். எனவே, இந்த கல்குவாரி அமைவது எனக்கு மிகவும் இடையூறாக அமையும். ஆகவே, இந்த குவாரி அமைவதற்கு மிகுந்த மனவேதனையுடன் எதிர்ப்பு தெரிவிக்கிறேன், இந்த குவாரி அருகில் தான் தன்னுடைய ஐந்து ஏக்கர் நிலம் இருக்கிறது. இந்த பகுதியில் குவாரிகள் அமைந்திருப்பதால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே, இந்த கல்குவாரி அமைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறேன். எழுத்துப்பூர்வமாகவும் தந்து உள்ளேன், என்று விளக்கி தன் உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 12 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 10 நபர்கள் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர். மீதமுள்ள 2 நபர்கள் குவாரி அமைப்பதற்கு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்தனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | P. வரதப்பிளைளை, சித்தாலப்பாக்கம் | இத்திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார் |
| 2 | M. மாலா. சித்தாலப்பாக்கம் | இத்திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார் |
| 3 | P. ரவி, சித்ராதுர்கா மாவட்டம், கர்நாடகா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4 | V. பாக்யலட்சுமி, அனந்தபுரம், கர்நாடகா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 5 | தி/ள் யூத் இன்ஸ்டியூட் நிறுவனம், திருப்பதி, ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6 | U. இராமச்சந்ரா, கடப்பா, ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7 | B. துர்கா பிராசாத். ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8 | தி/ள். சைத்தானியா வெல்பர் சொசையிட்டி, ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9 | B. முனி கிருஷ்ணா, ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10 | S. சிரஞ்சீவி, திருப்பதி, ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11 | A. சுப்பிரமணியம், ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12 | A.P. இராஜேந்திரன், ஆந்திரபிரதேசம், | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.27.07.2024).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (5 பக்கங்கள் 46 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தினரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 12 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**மாவட்ட ஆட்சியர்,**
**திருவண்ணாமலை.**